# அனுமதி வழங்குதல்

**மரங்களை வெட்டுவதற்கான அனுமதி வழங்குதல்**

தடைசெய்யப்பட்ட மரக்கட்டைகளை போக்குவரத்து செய்வதற்கு, வனப் பாதுகாவலரிடமிருந்து அனுமதி பெறல் வேண்டும். தடை செய்யப்படாத மரக்கட்டைகளை போக்குவரத்து செய்வதற்கு மட்டுமே, கோட்ட செயலகம் அனுமதி அளிக்கும்.

தடைச் செய்யப்பட்ட மரங்களின் வகைகள் பின்வருமாறு:

- கருங்காலி மரம்
- கழுவர எடிரியா
- சாட்டின்
- காலன்கிக்
- பலு
- சூரியமாறா
- கமளு
- கால்மில்லா
- மில்லா
- பேலன்
- பேனாக்கா
- கும்புக்
- கொகாம்பா
- மீ

மூங்கில், சுவான் மரக்கட்டை, கம்பு, வேலி கம்பு, எரிமரம், புதிய களபாடம், ஜன்னல், நிலைகள், ஜன்னல் பலகை, கதவு நிலைகள், கதவு பலகை போன்ற ஏதாவது மரத்தினால் (மேற்குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட வகைகளைத் தவிர) செய்யப்பட்டதின் போக்குவரத்திற்கான அனுமதியை கோட்ட செயலகத்திடமிருந்து பெற வேண்டும்.

**தகுதி**

- போக்குவரத்து செய்யவேண்டிய மரம் மேலே கொடுக்கப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட வகைகளை தவிர வேறு மரக்கட்டைகளாக இருத்தல் வேண்டும்.
- மரம் வாங்கிய நிலம் தனியாரின் நிலமாக இருத்தல் வேண்டும்.

**சமர்ப்பிக்கும் முறைகள்**

**விண்ணப்பபடிவம் பெறுதல்**

- விண்ணப்பதாரர், விண்ணப்பப்படிவத்தை கிராம சேவகரிடமிருந்து பெறல் வேண்டும்.
- விண்ணப்பம் அனைத்து வகையிலும் பூர்த்திச் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

**தேவையான இணைப்பு ஆவணங்கள்**

- மரக்கட்டைகள் பெறப்பட்ட இடத்தின் பத்திரம் / மானியச் சான்றிதழ் / அனுமதி அறிக்கை ஆகியவற்றின் சான்றழிக்கப்பட்ட நகல்கள்.
- பாதுகக்கப்பட்ட / பிரிக்கப்படாத எல்லையோற அரசாங்க நிலத்திலிருந்து மரக்கட்டைகள் பெறப்பட்டால் அந்த நிலத்தின் உண்மை நில அளவை திட்டத்தை அளித்தல்.
- விற்பனை மூலம் மரக்கட்டைகள் பெறப்பட்டிருந்தால், அதற்குரிய பற்றுச்சீட்டு.
- மரக்கட்டைகள் வாங்கியிருந்தால், கிராம சேவகரால் சான்றளிக்கப்பட்ட பற்றுச்சீட்டு.
- மரக்கட்டைகள் நன்கொடையாக பெற்றிருந்தால், கிராம சேவகருடைய கடிதம் மற்றும்

சான்றிதழ்.
- மரம் வெட்டுவதற்கான அனுமதி.

**விண்ணப்பப்படிவம் ஓப்படைத்தல்**

- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை கிராம சேவகரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

அதற்கு பின், கிராம சேவகர் சம்மந்தப்பட்ட கோட்ட செயலகத்திடம்
விண்ணப்பப்படிவத்தை ஒப்படைத்தல்.
குறிப்பு
- நில உரிமையை நிரூபிப்பதற்காக, நிலத்திற்கான பத்திரம் அவசியம் வேண்டும்.

**விண்ணப்பப்படிவங்கள்**

| விண்ணப்பப்படிவத்தின் இலக்கம் / பெயர் | விளக்கம் |
|---|---|
| மரக்கட்டை / புதிய தளபாடம் / உபயோகித்த தளபாடம்; ஆகியவற்றை போக்குவரத்து செய்வதற்கான அனுமதி விண்ணப்பம் | வரையறுக்கப்படாத மரக்கட்டைகளின் போக்குவரத்திற்கான அனுமதிப் பெறுதல் |

**படிப்படியான வழிமுறைகள் (மரத்தை ஏற்றிச்செல்வதற்கான அனுமதி பெறுதல்)**

படி 1: சம்மந்தப்பட்ட கிராம சேவகரிடமிருந்து விண்ணப்ப படிவத்தை விண்ணப்பதாரர் பெற வேண்டும்
படி 2: விண்ணப்பதாரர் முழுமைபெற்ற விண்ணப்பபடிவத்தையும் தேவையான ஆவணங்களையும் கிராம சேவகரிடம் சமர்பித்தல் மற்றும் சம்மந்தப்பட்ட தொகையையும்  சமர்பிக்கவும.;
படி 3: கிராம சேவகர் அறிக்கையை தயார் செய்து விண்ணப்பபடிவத்துடன் இணைத்தல்
படி 4: கோட்ட செயலகத்திடம் விண்ணப்பபடிவம் மற்றும் இதர ஆவணங்களையும் கிராம சேவகர்  ஒப்படைத்தல்
படி 5 வன இலாக்கா திணைக்களத்திடம் விண்ணப்படிவம் மற்றும் இதர ஆவணங்களையும் கோட்ட செயலகம் அனுப்புதல்.
படி 6: கோட்ட செயலகத்திடம் வனத்துறை பாதுகாவலர் நேரடியாக பார்வையிட்டு அறிக்கையை அனுப்பி வைப்பார்.
படி 7: சம்மந்தப்பட்ட கோட்ட செயலகத்திடமிருந்து கிராம சேவகர் சம்மந்தப்பட்ட தொகையை செலுத்துவதுடன் ஒப்புதலை பெறுதல்.

குறிப்பு:
விண்ணப்பதாரர்கள் தரும் தகவல்கள் வனப்பாதுகாப்பாளரின் திருப்திகரமாக இல்லையெனில் விண்ணப்ப படிவம் நிராகரிக்கப்படும்.

**காலக்கோடு**

**செயல்முறை காலக்கோடு**
கோட்ட செயலகம் அனுமதி வழங்குதல்    : 2 வாரங்கள்
மரத்தை ஏற்றிச்செல்வதற்கான நேரம்  -  மு.ப 6.00 மணி முதல் பி.ப 6.00 மணி வரை.

**சமர்பிக்க வேண்டிய காலக்கோடு**
பொருந்தாது

குறிப்பு: விண்ணப்பம் கிராம சேவகரிடம் சமர்பிக்கவேண்டும.;

**ஏற்றுக்கொள்ளக்கூடிய காலக்கோடு**
ஒப்புதலில் குறிப்பிடப்பட்ட திகதி மற்றும் நேரத்தில் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்

வேலை நேரம் / நாட்கள்

கோட்ட செயலக அலுவலகம் (நிறுவனப் பிரிவு): மு.ப9.00 மணி முதல் –
பி.ப4.30 மணி வரை

திங்கள் மற்றும் புதன்

**சேவை தொடர்பான கட்டணங்கள்**
மரத்தை ஏற்றிச்செல்வதற்கான கட்டணம் உபயோகிக்கப்படும் வாகனத்தை பொருத்து வேறுபடும்.

1. தோளில் சுமந்து செல்வதற்கு கட்டணம் இல்லை.
2. பார வண்டிக்கு ரூ. 150/-
3. கைஇழுவை இயந்திரத்திறத்திற்கு ரூ. 150/-
4. இழுவை இயந்திரத்திறத்திற்கு ரூ. 150/-
5. லாரிக்கு ரூ.150/-

**தேவையான இணைப்பு ஆவணங்கள்**

- மரங்களை பெற்றுக்கொண்ட நிலத்தின் பத்திரம்;/அனுமதி சான்றிதழ்/அனுமதி ஆவணம் ஆகியவற்றின் பிரதிகள்.
- பாதுகாக்கப்பட்ட / பிரிக்கப்படாத அரசு நிலத்தில் இருந்து பெறப்பட்ட மரக்கட்டை, நிலத்தின் உண்மையான பயிற்ச்சித் திட்டத்திற்க்கான நில அளவை
- ஏலத்தில் மரக்கடைகள் பெற்றுக்கொள்ளப்படடிருந்தால் அதற்கான பற்றுச்சீட்டு.
- மரக்கட்டையை விலை கொடுத்து வாங்கியிருப்பின் அதன் பற்றுச்சீட்டு, கிராம சேவகர் மூலம் சான்றளிக்கப்பட்டிருக்க வேண்டும்.
- மரக்கட்டை நன்கொடையாக பெற்றிருப்பின் கிராம சேவகரிடம் இருந்து கடிதம் மற்றும் சான்றிதழ் பெறுதல்.
- மரத்தை வெட்டுவதற்கான அனுமதியின் பிரதி.